# தமிழ்நாட்டில் புயல் அபாயம் குறித்த விழிப்புணர்வு ஒத்திகை!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, செப்.3-

தமிழ்நாடு மாவட்டங்களில் புயல் அபாயம் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஒத்திகை பயிற்சியை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் ஆய்வு செய்தார்.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் இணைந்து மாவட்ட ஆட்சியர், பிற துறை அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்கான புயல் அபாயம் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஒத்திகை பயிற்சி நேற்று முன்தினம் (02.09.2023) தமிழகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியிலும், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் புயல் தொடர்பான ஒத்திகை பயிற்சியில் கலந்து கொண்டு, புயலின் தாக்கத்திற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஒத்திகை பயிற்சியின் போது, காலை 9.00 மணிக்கு மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களுக்கு VHF தொலைத் தொடர்பு மற்றும் முன்னெச்சரிக்கைக் கருவிகள் மூலமாக புயல் அபாய எச்சரிக்கை வழங்கப் பட்டது. மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையத்திலிருந்து தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக் கப்பட்டு, மீட்பு படையின் உதவியுடன் மாவட்ட நிருவாகம் ஒருங்கிணைந்து பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்கவைத்து அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.

பின்னர், புயலின் காரணமாக பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் சிக்கிக் கொண்ட பொதுமக்கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு முதலுதவி அளிக்கப் பட்டு அங்கு தயாராக இருந்த ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

இந்த ஒத்திகை பயிற்சியின் மூலம் மாநில மற்றும் மாவட்ட அளவில் பேரிடர் காலங்களில் இணைந்து செயல்படும் முக்கிய துறைகள் மற்றும் பிற அரசு நிறுவனங்களின் தயார் நிலை மதிப்பீடு செய்யப்பட்டதோடு, பேரிடர் நிகழ்வு, மீட்பு அமைப்பின் செயல்பாடுகள், (Incident Response System) குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஒத்திகையின் போது, கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலர் வி. ராஜாராமன், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் கமாண் டென்ட் ஆதித்ய குமார், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.அ. ராமன், தேசிய பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு பேரிடர் படை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, முப்படையை சார்ந்த அலுவலர்களும் மற்றும் பேரிடர் மேலாண்மையில் பெரும் பங்கு வகிக்கும் முக்கிய துறைகளை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




### ஆதித்யா எல் 1:


## சுற்றுவட்டப்பாதை வெற்றிகரமாக உயர்த்தப்பட்டது!

*பெங்களூரு, செப். 4 -*

*பிஎஸ்எல்வி சி57 ராக்கெட் மூலம் ஏவப்பட்ட ஆதித்யா எல்1 விண்கலம் நேற்று முன்தினம் புவி சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டது.*

*இந்த விண்கலம் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 4ம் தேதி அதன் இலக்கை அடையும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.*

*அதாவது, ஆதித்யா எல் 1 விண்கலம் சூரியனை ஆய்வு செய்வதற்கான லாக்ரேஞ்சு புள்ளி இருக்கும் இடத்திற்கு 4 மாத பயணத்திற்கு பின்னரே சென்று சேரும் என்றும் அந்த இடத்தில் இருந்து கிரகணங்கள் அல்லது மறைவுகளால் தடையின்றி தொடர்ந்து*




*சூரியனை கண்காணித்து ஆய்வு பணியில் இந்த விண்கலம் ஈடுபடும் என்றும் இஸ்ரோ தெரிவித்தது.*

*இந்நிலையில், ஆதித்யா எல் 1 விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை வெற்றிகரமாக உயர்த்தப்பட்டது. அடுத்த சுற்றுவட்டப் பாதைக்கு உயர்த்தும் நடவடிக்கை வரும் 5ம் தேதி மேற்கொள்ளப்படும் என இஸ்ரோ அறிவித்துள்ளது.*

*ஆதித்யா எல் 1 விண்கலம் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் இஸ்ரோ அறிவித்துள்ளது.*

